முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.11.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **அகிலம் காக்க மாதவசியாக**
**அவதாரம் புரிந்த அண்ணலே**
**மகிழ்வுற மக்கள் நிலை மாற**
**மரணம் வெல்லும் சக்தி அருள வந்த**
2. அருளவந்த ஆறுமுக அரங்கா
அகிலமதில் உன் பெருமை கூறி
அருள்பட ஒளி சூட்சும நூலை
அறிவிப்பேன் **விளம்பி தேள் திங்கள்**
3. **திங்களிலே உபய திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிற்றுக்கிழமை)**
**தேசிகனுக்கு உருத்திரபசுபதி நாயனாரும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓம் என்ற பிரணவ சக்தி
4. சக்தி தேசமெல்லாம் பரவிட
சாத்வீகம் மக்களிடை பெருகி
பக்திமிகு ஆறுமுகன் ஆளும்
பலமான ஞானயுகம் ஆகும்
5. ஆகவே அரங்கமகான் மூலமாக
ஆறுமுகனார் அருளும் கொள்கை
வகைபட வளர்ந்து பெருகிட
வையகமே பாதுகாப்பு நிலை பெறும்
6. நிலையான இயற்கை சூழல்
நிலவுலகில் பசுமை வளமும்
பிழையுற மக்களிடை நற்குணம்
பேதமிலா சமத்துவ சமதர்மநிலை
7. நிலை கூடி உலகம் எங்கும்
நிலை பெறும் இந்த கலியுகம்
சளைக்கா தருமநெறி தானும்
சாதிக்கும் கலியிடரை வென்று
8. வென்றுமே தமிழகம் தொட்டு
வேலவன் ஆளுமை பெருகி
நன்றான ஞான ஆட்சியாக
ஞானயுகமாகவும் கலியுகமே மாறும்
9. மாறுதலை செய்ய வந்த ஞானி
மாதவசியாக வந்த அரங்கனை
வருமுலகில் உலகோர் தொடர்ந்து
வணங்கி வர நன்மைகள் கூடும்

10. கூடவே ஞானிகள் பூசையும்
குறையிலா தானதரும பலமும்
நாடவே பெருகி மக்களிடை
ஞான சக்தியாக ஜீவதயவு

11. தயவு கூடி தரணியோர் மாறுவர்
தரணியே தயவுநிலை பெருகிட
தயவுமிக்க ஞான ஆட்சியாகும்
தாமுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

### மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :

இவ்வுலகை காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகாதவசியே அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே மக்களின் துன்பங்களை போக்கி மக்களின் நிலையை மாற்றி, அவர்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வை அடையும் சக்திகளை அருள வந்திட்ட ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி உலகினில் முருகப்பெருமானின் ஆட்சி அமைந்து ஞானஉலகமாக இவ்வுலகம் மாறிடவே **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 2ம் நாள் 18.11.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல் தனையே உருத்திரபசுபதி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் உருத்திரபசுபதி நாயனார்.

ஓம் என்கிற ஓங்கார சக்தி நாடெங்கும் பரவிட நாட்டு மக்களிடத்து சாத்வீகம் பரவிடும். மக்களிடையே சாத்வீகம் பெருகி பக்திமிக்கதாய் உள்ள முருகப்பெருமானின் ஆட்சி நடக்கும் பலம்மிக்க ஞானயுகமாக இவ்வுலகம் மாறிடும்.

ஆதலினால் உலக மக்களிடம் சாத்வீகம் பரவிட பக்தி பெருகிட உண்மை ஆன்மீகம் வளர்ந்திட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக முருகப்பெருமானே அரங்கனைச் சார்ந்து அருளுகின்ற ஞானக் கொள்கையானது முறையோடு மக்களிடம் சென்றடைந்து மக்களும் அதை கடைப்பிடித்திட இந்த உலகமே பாதுகாப்புமிக்க அருள்பலம்மிக்க நிலையை அடைந்திடும்.

நாட்டினில் இயற்கை சீற்றம் ஏதும் இல்லாமல் இயற்கை சூழல் பாதுகாப்பாய் இருக்கும் உலகினில் இயற்கையும் சமநிலை பெற்று உலகமெங்கும் பசுமை வளம் பெருகிடும். மக்களிடையே நற்குணங்கள் பெருகி பேதாபேதம் இல்லாத சமத்துவ சமதர்ம நிலை பெருகிட உலகமெங்கும் சமநிலை பெறும்.

இந்த துன்பம்மிக்க கலியுகமும் தருமநெறி பெருகிட பெருகிட கலியுகம் தமது வலுவை இழந்து கலியுகத்தை தர்மம் வென்று சாதிக்கும். இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளும் அற்புதமான மாற்றங்களும் ஞானபூமியாம் தமிழகத்திலிருந்து துவங்கி தமிழகத்தினில் முருகப்பெருமானின் தலைமையினால் ஆகிய ஞானிகள் ஆளும் ஞான ஆட்சி உருவாகிடும். அது படிப்படியாக உலகமெங்கும் விரிவடைந்து உலகம் முழுதும் ஞானபண்டிதன் முருகப்பெருமானின் ஆட்சிக்கு கீழ் வந்து இந்த உலகமே கலியுகத்தினிலிருந்து விடுபட்டு ஞானயுகமாக மாறிடும்.

இப்படிப்பட்ட அதிஅற்புதமான உலகப் பெருமாற்றத்தை செய்ய அவதாரமாக அவதரித்துள்ள மகா ஞானி மாதவசி ஆறுமுக அரங்கமகா தேசிகனை உலக மக்களெல்லாம் பயபக்தியுடன் பணிந்து வணங்கி அரங்கன் கொள்கைகளை முருகப்பெருமானே கூறிய கொள்கைகளாக ஏற்றுத் தொடர்ந்து கடைப்பிடித்து வர, உலகினில் நன்மைகள் பெருகிடும்.

உலகோர் ஞானபூசைகளை அதிகமாக செய்தும் குறைவின்றி தானதருமங்களை செய்திட ஞானிகள் பூசையும் தருமமும் பெருகி, மக்களிடையே ஞானசக்தியாக ஜீவதயவு பெருகி உலக மக்களெல்லாம் தயவுடையவர்களாக ஞானம் பெற்றவர்களாக ஆகிடுவார்கள். உலகமெங்கும் தயவுநிலை பெருகிட இந்த உலகம் தயவுமிக்க ஞானஆட்சியாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் உருத்திரபசுபதி நாயனார்.

–சுபம்–